DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No. 135/2022**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 22[th] day of June 2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 03** | கிராமம் | : | தொருவளூர் |
| பெயர் | : | வினோத் | தாலுகா | : | இராமநாதபுரம் |
| த/ பெ. | : | முருகேசன் | சமயம் | : | இந்து |
| வயது | : | 29 | ஜாதி | : | தேவேந்திரகுல வேலாளர் |
| தொழில் | : | எலக்ட்ரிக்கல் வேலை | | | |

<u>நாள்: 22.06.2023</u>
<u>நேரம்: 12.05 பி.ப.</u>

1,2 எதிரிகள் ஆஜர்.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

<u>**முதல் விசாரணை:**</u>

நான் மேற்படி முகவரியில் வசித்து எலக்ட்ரிக்கல் வேலை செய்து வருகிறேன். நான் 2,3 வருடங்களுக்கு முன்பாக எனது வீட்டில் இருந்தபோது மாலை 6 மணியை போல போலிசார் என்னிடம் ஒரு வெள்ளைப்பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆகும்.** அதில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி விசாரணையில் பிறழ் சாட்சியாக மாறியுள்ளதால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

**<u>அரசுதரப்பு கு.வி.</u>**

கடந்த 27.05.2021ம் தேதி மாலை 6 மணியைப்போல போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும், முனியசாமி என்பவரும் கையொப்பம் செய்தோம் என்று போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு கு.வி –இல்லை.**

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2023.06.22 17:32:04 +0530

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No. 135/2022**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 22[th] day of June 2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW –04** | கிராமம் | : | இராமநாதபுரம் |
| பெயர் | : | ஜெகநாதன் | தாலுகா | : | இராமநாதபுரம் |
| த/ பெ. | : | ஹரிஹரபுத்திரன் பிள்ளை | சமயம் | : | இந்து |
| வயது | : | 58 | ஜாதி | : | -- |
| தொழில் | | சார்பு ஆய்வாளர் | | | |

<u>நாள்: 22.06.2023</u>
<u>நேரம்: 12.10 பி.ப.</u>

1 ,2 எதிரிகள் ஆஜர்.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**<u>முதல் விசாரணை–</u>**

நான் தற்போது பஜார் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். பஜார் காவல்நிலைய குற்ற எண். 266/2021 U/s. 294(b), 323, 324, 336, 506(1) IPC & 4 of TNPHW Act ன் கீழ் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்ட சார்பு ஆய்வாளர் திரு. திபாகர் மற்றும் இவ்வழக்கை மேல்விசாரணை செய்த சார்பு ஆய்வாளர் திரு. சிவஞானபாண்டியன் அவர்கள் தற்போது பணிமாறுதலாகி வேறுகாவல்நிலையங்களில் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களது கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். இவ்வழக்கின் கூடுதல் சாட்சியாக சேர்க்கப்பட்டு ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 27.05.2021ம் தேதி 02.00 மணியளவில் சார்பு ஆய்வாளர் திரு. திபாகர் அவர்கள் நிலையப் பொறுப்பிலிருந்தபோது அ.சா.1 கோபால் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 266/2021 U/s. 294(b), 323, 324, 336, 506(1) IPC & 4 of TNPHW Act ன் கீழ் வழக்குப் பதிவு செய்தார். வாதியின் புகாரையும் முதல் தகவல் அறிக்கையும் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3**

**ஆகும். வாதியின் புகார் அ.சா.ஆ.4 ஆகும்.** பின்பு சம்பவயிடம் சென்று சாட்சிகள் முனியசாமி மற்றும் வினோத் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆகும்.** அன்றைய தினமே சாட்சிகள் கோபால், நாகஜோதி, அபிராமி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு அ.சா.1 ற்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. சாகுல் ஹமீது அவர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்று விபத்துப்பதிவேடு பெற்றுள்ளார். **அ.சா.1ன் விபத்துப் பதிவேடு அ.சா.ஆ.7 ஆகும்.** எதிரிகள் மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் 27.07.2021ல் முன்பிணை தாக்கல் செய்து பிணையில் சென்றுள்ளார்கள். பின்பு வழக்கு கோப்புகளை சார்பு ஆய்வாளர் திரு. சிவஞானபாண்டியன் அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார். சார்பு ஆய்வாளர் அவர்கள் வழக்கு கோப்புகளை பார்வையிட்டு அவரது விசாரணையை முடித்து எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரிகள் தரப்பு கு.வி:</u>

சொன்னதுபோல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் இவ்வழக்கின் விசாரணை அதிகாரி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கில் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்ததில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. விசாரணை அதிகாரி சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது குற்ற இறதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

**ம.வி – இல்லை.**

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2023.06.22 17:32:12 +0530